# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ fryeopaul@gmail.com |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் nithiya@catholic.org.sg | **பங்கு அலுவலகம்:** ololsec@gmail.com ololpastoral@gmail.com |

| | | |
|---|---|---|
| **07 ஏப்ரல் 2019** | **தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

இயேசுவிற்கு மிகவும் நெருக்கமானவர்களே! தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு ஞாயிறும் ஒரு தனிப்பட்ட கருத்தை எடுத்துச் சிந்தித்து நம் அகவாழ்வை ஆராய்ந்துப் பார்க்க வாய்ப்புக் கொடுக்கிறது. தவக்காலத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமையாகிய இன்று மீண்டும் நம் அக வாழ்வைச் சிந்திக்க ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தவறுவது மனித இயல்பு. ஆனால் தவறுக்குப்பின் திருந்தி எழுவதுதான் மனிதனின் மாண்பு. அது தான் கிறிஸ்தவனின் பண்பு என்பதை இன்றைய இறைவாக்குகள் அதிலும் சிறப்பாக நற்செய்தி வாசகம் நமக்கு வெளிப்படுத்துகின்றது

இயேசு இரக்கத்திலும், மன்னிப்பதிலும், அன்புச் செய்வதிலும் என்றும் மாறாதவர். இயேசு யாரையும் தீர்ப்பிடுவதில்லை. இரண்டாம் வாசகத்திலும், "நான் விரும்புவது எல்லாரும் இயேசுவை அறிந்து கொள்ள வேண்டும்" என்ற திருத்தூதர் பவுலின் கூற்றும், முதல் வாசகத்தில் இதோ, நாம் புதியனச் செய்கிறோம் என்ற எசாயா இறைவாக்கினரின் முழக்கமும், இயேசுவின் பாணியில் நாம் பிறருக்குத் தீர்ப்பிடாமல், மன்னித்து ஏற்கும் மனப்பக்குவத்திற்கு நம்மை அழைக்கின்றது.

இரண்டாம் வாசகத்தில், திருத்தூதர் பவுலடியாரைப் பொறுத்த மட்டில் ஒருகாலத்தில் முதன்மையானவை என இருந்தவை இப்போது கிறிஸ்துவை அறிந்தவுடன் கடைநிலைக்குச் சென்றுவிட்டன. கிறிஸ்துவைப் பற்றிய அறிவின் முன் இவை யாவும் குப்பை அல்லது இழப்பு. "கடந்ததை மறந்து விட்டு, முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு" வாழ திருத்தூதர் பவுல் அழைப்பு விடுக்கிறார். இயேசுவில் ஒப்புரவு கொண்டு நம்மிலே மனமாற்றம் காண இத்திருப்பலியில் முழுமனதோடு பங்கேற்போம்.

## புனித வார வழிபாடுகள் மற்றும் திருப்பலி நேரங்கள்




**குருத்தோலை ஞாயிறு (14-04-2019):**
காலை 9:00 மணி மற்றும் மாலை 6 மணி (தமிழ்)

**பெரிய வியாழன் (18-04-2019):**
இரவு 8 மணிக்கு **ஆங்கிலம் மற்றும் தமிழ்** கலப்புத் திருப்பலி நடைபெறும்.

**திருப்பாடுகளின் வெள்ளி (19-04-2019):**
மதியம் 2:30 மணிக்கு சிலுவைப்பாதை, தொடர்ந்து திருச்சடங்குகள். **(ஆங்கிலம்)**
மாலை 6 மணிக்குத் திருச்சடங்குகள், தொடர்ந்து சிலுவைப்பாதை. **(தமிழ்)**

**பெரிய சனிக்கிழமை (20-04-2019):** உயிர்ப்புப் பெருவிழா திருவிழிப்பு திருப்பலி
இரவு 7:30 மணி **(ஆங்கிலம்),** இரவு 11:30 மணி **(தமிழ்)**



**உயிர்ப்பு ஞாயிறு (21-04-2019):**
காலை 7:30, 11:30 மற்றும் மதியம் 1 மணி **(ஆங்கிலம்)**
காலை 9:30 மணி மற்றும் மாலை 6:30 மணி **(தமிழ்)**

## சிலுவைப்பாதை பக்தி முயற்சி



நமது ஆலயத்தில், வருகின்ற வெள்ளிக் கிழமை (12-04-2018) இரவு 8 மணிக்கு, தமிழில் சிலுவைப் பாதைப் பவனியானது **ஆலயத்தைச் சுற்றி வெளியே** நடைபெறும். அதனைத் தொடர்ந்து திருப்பலி ஆலயத்திற்குள் இடம்பெறும். இயேசுவின் சிலுவைப் பாடுகளைத் தியானித்து, உள்ளத்தில் மாற்றம் பெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில் இரவு** 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!



## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக "Church of Our Lady of Lourdes" என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் "Building Fund" என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



## இரண்டாவது காணிக்கை

இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாவது காணிக்கை, தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் செய்யும் நற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.




## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை நடைபெறும் முழு இரவு திருவிழிப்பு செபம், குருத்து ஞாயிறு காரணமாக **இம்மாதம் நடைபெறாது** என்பதை அறியத் தருகிறோம்.



## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 43: 16-21 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 126: 1- 6 |
| **பதிலுரை:** | ஆண்டவர் மாபெரும் செயல் புரிந்துள்ளார்; அதனால் பெருமகிழ்வடைகின்றோம். |
| **இரண்டாம் வாசகம்:** | பிலிப்பியர் 3: 8-14 |
| **வாழ்த்தொலி:** | இப்பொழுதாவது உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள். ஏனெனில் நான் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர், என்கிறார் ஆண்டவர். |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 8:1-11 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

